
உ
சிவமயம்



அமரர்

# திருமதி மங்களேஸ்வரி ஞானலிங்கம்

அவர்களின் சிவபதப்பேறு குறித்த

# நினைவு மலர்

06.02.2006

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



யாழ்ப்பாணம் தென்மராட்சி கொடிகாமத்தைப்
பிறப்பிடமாகக் கொண்டவரும் யாழ் பிரதம தபால் அதிபர்
திரு. க.ஞானலிங்கத்தின் துணைவியுமாகிய

அமரர்

**திருமதி மாங்களேஸ்வரி ஞானலிங்கம்**

அவர்களின் அமரத்துவத்தை முன்னிட்டு
வெளியிடப்படும்

# நினைவு மலர்

**06.02.2006**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உ
சிவமயம்



# சமர்ப்பணம்

புன்நெறி அறியா நன்னெறிப் பிறப்பே!
அன்பே அணையாப் பண்பொளிச் சுடரே!
இன்ப நல்லறப் புனிதச் சோதியே!
கண்ணே! கற்பகமே! கனிமொழிச் சுவையே!
பண்பாடும் பாக்கியப் படரொளிப் பரப்பே!
வண்பாடும் பூங்காவின் தெய்வத் தாயே!
என்றும் நின்றீர்கள் எம்முளத் திடலில்
என்றென்றும் நிற்பீர்கள் என்பதுண்மை
உண்மை என்பதால் எமதுள்ளக் குன்றில்
அன்பு ஊற்று பொங்கி ஓடப்
பண்பாய் திருநீறு பூசிப் பொட்டிட்டு
அன்பாய் பண்போடு மலர்மாலை சாற்றி
தங்கள் பாதத்தில் பாமாலை சமர்ப்பிக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி

குடும்பத்தினர்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவமயம்



அன்னை மடியில்
05.01.1949

இறைவன் திருவடியில்
07.01.2006

# அமரர்

# திருமதி மங்களேஸ்வரி ஞானலிங்கம்

## திதி வெண்பா

ஆண்டு பார்த்திப வருடம் சனி மார்கழியில்
உருவளர் வளர்பிறை அட்டமி திதியில் - திரு நிறையும்
மங்களத்திலுயர் மங்களேஸ்வரி பந்தவினை விடுத்து
விண்ணுலகு அடைந்தாள் விரைந்தே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவமயம்

*திருச்சிற்றம்பலம்*



## விநாயகர் துதி

விநாயகனே வெவ்வினையை வேரறுக்க வல்லான்
விநாயகனே வேட்கைதணி விப்பான் - விநாயகனே
விண்ணிற்கும் மண்ணிற்கும் நாதனுமாந் தன்மையினாற்
கண்ணிற் பணிமின் கனிந்து.

# பஞ்சபுராணம்

## தேவாரம்

ஆடினாய் நறு நெய்யோடு பால் தயிர்
அந்தணர் பிரியாத சிற்றம்பலம்
நாடினாய் இடமா நறும் கொன்றை நயந்தவனே
பாடினாய் மறையொடு பல்கீதமும்
பல்சடைப் பனிகால் கதிர் வெண் திங்கள்
சூடினாய் அருளாய் சுருங்க எமதொல்வினையே.

## திருவாசகம்

பாரொடு விண்ணாய்ப் பரந்த வெம்பரனே
பற்றுநான் பற்றிலேன் கண்டாய்
சீரொடு பொலிவாய் சிவபுரத்தரசே
திருப்பெருந் துறையுறை சிவனே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆரொடு நோகேன் ஆர்க்கெடுத்துரைப்பேன்
ஆண்டநீ அருளினை யானால்
வார்கடலுலகில் வாழ்கிறேன் கண்டாய்
வருகவென்றருள் புரிவாயே.

## திருவிசைப்பா

நீறணி பவளக் குன்றமே நின்ற
நெற்றிக் கண்ணுடையதோர் நெருப்பே
பேறணி புவன போகமே யோக
வெள்ளமே மேருவில் வீரா
வாறணி சடை எம் அற்புதக் கூத்தா
அம் பொன் செய் அம்பலத் தரசே
ஏறணி கொடியெம் ஈசனே உன்னைத்
தொண்டனே இசையுமாறிசையே.

## திருப்பல்லாண்டு

மன்னுலக தில்லை வளர்க நம் பக்தர்கள்
வஞ்சகர் போயகல
பொன்னிற் செய் மண்டபத்துள்ளே புகுந்து
புவனியெல்லாம் விளங்க
அன்னநடை மடவாள் உமைகோன்
அடியோமுக்கு அருள்புரிந்து
பின்னைப் பிறப்பறுக்க நெறிதந்த பித்தற்கு
பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்

ஆதியாய் நடுவும் ஆகி அளவு இலா அறவம் ஆகி,
ஜோதியாய் உணர்வும் ஆகி, தோன்றிய பொருளும் ஆகி,
பேதியா வேகம் ஆகி, பெண்ணுமாய் ஆணும் ஆகி,
போதியா நிற்கும் தில்லை பொதுநடம் போற்றி போற்றி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புகழ்

ஏறுமயிலேறி விளையாடு முகமொன்றே
ஈசனுடன் ஞானமொழி பேசுமுகம் ஒன்றே
கூறுமடியார்கள் வினை தீர்த்த முகமொன்றே
குன்றுருவ வேல்வாங்கி நின்ற முகமொன்றே
மாறுபடு சூரரை வதைத்த முகமொன்றே
வள்ளியை மணம்புணர வந்த முகமொன்றே
ஆறுமுக மானபொருள் நீயருளல் வேண்டும்
ஆதியருணாசலம் அமர்ந்த பெருமாளே.

## திருமந்திரம்

ஊரெல்லாம் கூடி ஒலிக்க அழுதிட்டுப்
பேரினை நீக்கிப் பிணமென்ற பேரிட்டுச்
சூறையங் காட்டிடை கொண்டுபோய்ச் சுட்டிட்டு
நீரினில் மூழ்கி நினைப் பொழிந்தார்களே
கிழக்கெழுந்தோடிய ஞாயிறு மேற்கே
விழக்கண்டுந் தேறார் விழியிலா மாந்தர்
சூழக் கன்று மூத்தெரு தாய்ச்சில நாளில்
விழக்கண்டுந் தேறார் வியனுல கோரே.

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க
மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை அரசசெய்க
குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க
நற்றவம் வேள்வி மல்க
மேன்மை கொள் சைவநீதி
விளங்குக உலகமெலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மண்ணக வாழ்வும் வரலாறும்

நாற்புறமும் கடல் சூழ் நடுவமர்ந்த
பொற்பதியாம் ஈழமணித் திருநாட்டின்
வளம் மலிந்த யாழ்ப்பாண நன்னகரில்
எழில் கொஞ்சும் திருத்தலமாம் தென்மராட்சி
அந்த அழகான மகுடமதில் ஓர் நல் முத்தாக
பார்புகழ்ந்த செம்மல்கள் தோற்றம் பெற்ற
அழகு தமிழ் வாசனை ஏற்றம் பெற்ற
அற்புதமாய் கொடிகாமம் அமைந்தது காண்

சைவத்தின் நெறியறிந்து நிறைவான
கறையில்லா இல்வாழ்வு சேரப்பெற்ற
திருவாளர் சிதம்பரப் பிள்ளையுடன் அன்னப்பிள்ளை
நோன்பிருந்த திறம் கண்டு பரமனவன்
வரம்கொடுக்க வந்துதித்த பரமேஸ்வரி
வேலாயுத பிள்ளையுடனே இளையவளாய்
பெருந்தவத்தாள் மங்களேஸ்வரியும் அவதரித்து
பேருலகம் பெருமைபெற வளர்ச்சி பெற்றாள்.

வளர்பிறையாம் மங்களேஸ்வரி தாரணியில்
தளிர்நடை பயின்று தழைத்து வந்தாள்
மலர்பூத்த மெல்லியலாள் தன் இளவயதில்
துடிப்பான சிறுமியாய் உலாப் போந்தாள்
அகரத்தை அறிந்து கொள்ளும் ஆவலோடு
ஆரம்பக்கல்விதனை கொடிகாமத்தில் பெற்றிட்டாள்
சீர் பெறவே சிந்தித்து மேற்படிப்பை
சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் கற்றறிந்தாள்

நெஞ்சமதில் கறையிலா பேரன்பு கொண்டு
உடன்பிறந்த சோதரரோடிணைந்து வாழ்ந்தாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றவரின் மனம்மகிழ உறவுகாண
பேரின்பச் சாகரத்தில் இணைந்து கொண்டாள்.
வஞ்சமிலா கண்மணியாள் தன் சோதரரின்
மழலைகளின் மகிழ்வோடும் மனம் நெகிழ்ந்தாள்.
வானிலவாய் வந்துதித்த மங்கை இவள்
வாழ்வியலில் வசந்தத்தை ஏந்தி நின்றாள்.

புன்னகையும் புதுப்பொலிவும் ஒருங்குசேர
யௌவனத்தின் வாசல்தனில் நுழைந்து கொண்டாள்
குலம் விளங்கு குணநடையும் பண்பும்சேர
மங்கையவள் பாரதனில் மலர்ந்து நின்றாள்
அச்சமட நாணமும் பயிர்ப்பினோடு
அறம் பேணும் தூயவளாய் மெருகேறினாள்
கற்பனையும் கனவுகளும் வளரும் நாளில்
ஏந்திழையை மணநெறிக்கு அழைக்கவந்தார்.

சரசாலைப் பதியினிலே வாழ்வுகொண்ட
கந்தசாமிப் பெருமகனும் தங்கம்மாவும்
பகைமையிலா இல்வாழ்வில் இணைந்துபெற்ற
ஐந்துபெரும் முத்துக்களில் நல்முத்தான
சீருடைய தபால் அதிபர் ஞானலிங்கத்தை
காரிகையின் கைசேர்க்க நிச்சயித்தார்
தோடுடைய செவியனும் பார்வதியும் போல்
இனிதான இல்வாழ்வில் இணைந்து கொண்டாள்.

வேதியரும் உற்றாரும் உடனிருந்து வாழ்த்த
வாத்தியமும் மந்திரமும் இணைந்து ஒலிசேர்த்து
மண்ணுலகில் வாழ்வாங்கு வாழவெனும்
எண்ணரிய பேறுபெற்ற பெருமகள்தான் என
விண்ணவரும் வியப்புறவே இல்லறத்தை
இயல்பாகக் கொண்டு சென்ற மாதரசின்
கண்ணினிய துணைவனாம் ஞானலிங்கம்
களிப்புடனே வாழ்கின்ற பேறுபெற்றான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மங்களமாய் இனிதுறவே மகிழ்ந்த வாழ்வில்
மகவுகளாய் மண்ணுலகில் அவதரித்த
கணக்கியலில் முதல்மகவாம் அரவிந்தன்
கால்பதித்த சிறப்பினால் பெருமை கொண்டாள்
பேராதனை பல்கலைக்கழக பல்மருத்துவ பீடமதில்
அன்புமகன் வைகுந்தனை அமர்த்தியே அழகு
- பார்த்தாள்
ஆசையுடன் பெற்றெடுத்த கடைக்குட்டி அச்சுதனின்
கனவுகளிற்கெல்லாம் வழிசமைத்துக் கொடுத்தாள்.

நேசமுடனே மனம் நெகிழ வாழும் நாளில்
இன்முகத்தில் புன்னகையைத் தவழவிட்டாள்
கண்ணினிய கணவனோடு மக்களிற்காய்
எண்ணரிய சேவைகளை செய்து நின்றாள்
நெஞ்சுருகி சுட்டிபுரம் அம்மனோடு
எருவன்பதிவாழ் விநாயகனை பூஜித்து
மரணத்தின் கரங்களிற்குள் சிக்கும்வரை
தொழுதபடி வாழ்ந்திருந்தாள் தூயவள்தான்.

பொன்னணிந்த மங்களத்தின் இதயமதில்
கூற்றுவனும் புகுந்து விளையாடினான்
எண்ணமெல்லாம் சிதைவுபட ஏக்கமுற்று
கைதொழுத தெய்வங்களை வேண்டிநின்று
மருத்துவத்தால் சீர்ப்படுத்த தலைநகரிற்கு
விரைந்து செல்ல எண்ணமிட்டு இருந்தவேளை
நினைவெல்லாம் கனவாகி உறவுகள் ஏங்க
தன்னரிய உயிர் பிரிந்து தனியே சென்றாள்.

சொந்த பந்த உறவெல்லாம் மனங்கலங்கி
சொல்லொணாத் துயரமதில் வாடுகின்றார்
கண்வருடிச் சொரியும் நீர் அருவியாக
நின்காலடியை வருடியதை கண்டிராயோ?

மானிடம் தம் வாழ்க்கையெல்லாம் மாயமென்றால்
நடு வயதில் காலதேவன் அழைப்பதுவோ
நின் நிழலில் சரண் புகுந்த புத்திரரின்
நினைவுகளில் செந்நெருப்பை வார்த்ததேனோ?

அன்னையே! எம் அகிலமாய் நீயிருந்து
இன்பமே எம்மைச் சூழ்ந்திட என்றே
மெய்யான பாசத்தை மேதினியில் தந்து
மெழுகாகி வாழ்வின் ஒளியான திருவே
ஐம்பதுடன் ஏழாண்டு பொற்புடனே வாழ்ந்து
கொற்றவனின் ஆணையால் நீ பிரிந்தாய்
பார்வதியும் ஈஸ்வரனும் உறையும் கைலைப்
பேறுபெற்று பெருஞ்சாந்தி பெற்றிடம்மா

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

***************************

## உலகின் நகரங்களும் புனை பெயர்களும்

**ஏழுமலைகள் கூடிய நகரம்;**

| | | |
|---|---|---|
| **அழியாத நகரம்** | - | **உரோமாபுரி** |
| **பொற்கோயில் நகரம்** | - | **அமிர்தசரஸ்** |
| **பொன் வாயில் நகரம்** | - | **சான்பிரான்ஸிஸ்கோ** |
| **புயலடிக்கும் நகரம்** | - | **சிக்காகோ** |
| **சூரியன் உதிக்கும் நாடு; காகித வீடு** | - | **ஜப்பான்** |
| **நள்ளிரவுச் சூரிய நாடு** | - | **நோர்வே** |
| **சூரியன் மறையும் நாடு** | - | **இங்கிலாந்து** |
| **இருண்ட கண்டம்; குகை வீடு** | - | **ஆபிரிக்கா** |
| **உலகின் கூரை** | - | **தீபெத்** |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கையறு நிலையில்
# கலங்கிடும் மொழிகள்...

ஈடினை இல்லா என்னருந் துணையே!
நினைவு மலருக்கு உன் நினைவை எழுதட்டாம்
எதனை எழுத எதனை எழுதாமல் விட.
பெண்பார்க்கத்தான் வந்தேனென்று
நீ மண் பார்த்து
நடந்து வந்த முதல் சந்திப்பை
எழுதவா? இல்லை, நேரம்
போகுது கெதியாகப் போகச்சொல்லி
வழியனுப்பி வைத்த
வைத்தியசாலை இறுதிச் சந்திப்பை எழுதவா?
எல்லாமே நினைவுக்கு வருகுதம்மா!
தாயோடறுசுவை போமாம்.
யாரோ சொல்லி வைத்தார்கள்
என்னால் ஏற்றுக்கொள்ள முடியாது.
இனித்தானம்மா எனக்கறுசுவை போகப்போகிறது.
வாழ்க்கையிலே மரணம் ஒன்றுதான் நிஷமாம்.
நண்பர்கள் ஆறுதல் சொல்கிறார்கள்.
ஆனால், எந்தனுக்குத் தாளவில்லை நிந்தன் பிரிவு.
ஆண்பிள்ளை அளக்கூடாதாம்.
அழுதழுதே ஆறாதாம் உன் நினைவு.
காலந்தான் தீர்வு தருமாம் சரி காத்திருக்கிறேன்.
நின் சாந்திக்காய் உன் குஞ்சுகளுடன் சேர்ந்து
வேண்டுகிறேன்.

ஓம் சாந்தி! சாந்தி!

*அன்புத்துணை*
**க.ஞானலிங்கம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கள் அன்பான அம்மா!

தன் உதிரத்தால் எமை ஆக்கி இப்பூவுலகத்தை எமக்குக் காட்டிய

எங்கள் அன்பான அம்மா!

அன்பு, பாசம், பரிவு, நேசம், கருணை என்ற சொற்களின் அர்த்தங்களை எமக்குப் புரியவைத்த

எங்கள் அன்பான அம்மா!

எத்துணை துன்பம் வந்தபோதும் அவற்றை எல்லாம் சகித்து, எங்கள் சுகத்திற்காகவும், சந்தோஷத்திற்காகவும்அரும்பாடுபட்ட

எங்கள் அன்பான அம்மா!

துன்பத்தால் தவித்து வருவோர்க்கு மன ஆறுதலையும் நிம்மதியையும் தரவல்ல வார்த்தைகள் கூறி அரவணைக்கும்

எங்கள் அன்பான அம்மா!

அசலையும் போலியையும் பார்த்த மாத்திரத்தில் வேறுபிரித்து உணரும் ஞானம் கொண்ட

எங்கள் அன்பான அம்மா!

கடைசி நிமிடம் வரை தனது கடமையிலிருந்து விலகாது எங்களுக்காகவே வாழ்ந்து, எங்களிடமிருந்து பிரிந்துபோன

எங்கள் அன்பான அம்மாவை

நினைத்துத் தவிக்கிறோம்! வாடுகிறோம்!

"பிரிவு" என்பது மிகக்கொடியது என்பதை உணர்கிறோம்......
எங்கள் அன்பான அம்மாவை இழந்தபின்......!
அம்மாவின் ஆத்மா சாந்தியடையப் பிராத்திக்கிறோம்!

**பிள்ளைகள்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எம் குரலொலி கேட்கிறதா?

காலனுக்கு உன்மீது என்ன பாசமோ?
எம் பாசம் தனை அறுத்து
தன்தேரிலுனை அழைத்துச் செல்ல
அப்படி! என்ன அவசரமோ?
நீ பொழிந்த பாசமழையில்
தான் குளிக்க நினைத்தானா? அன்றி
எம் பாச உணர்வைத் தான்
பரீட்சித்துப் பார்த்தானா?
அம்மா! எம் குரலொலி கேட்கிறதா?
உன் குரலின் ஒலிகள் சுகமாய்.... சோகமாய்
எம் செவிக்குள் ஒலிப்பதைக் கேளம்மா.
முத்தான மூன்று பிள்ளைகளென
பிறந்த எம்மை - பெருஞ்
சொத்தாய்க் கருதினாயே?
படிப்பாலே நாம் பாரில் உயர்வதை - நீ
ஜீவத் துடிப்பாய்க் கொண்டாயே? அம்மா!
உன் இலட்சியத்தின் பாதையில்
நாம் தடம் பதிக்கையில் - நீ
இடம் மாறிப் போனாயே?
உலகிலிருந்து போனது உன் உடல்தானே!
நீ எமக்குள் ஐக்கியம்
எம் உயிரில் கலந்தவளே
உயிர் மூச்சில் ஒளிர்பவளே
உன் இலட்சியக் கனவுகள் - இனி
எங்கள் சத்தியக் கனவுகள்!!!

(பிள்ளைகள்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனிதருள் மாணிக்கம்

அமரர் ஞானலிங்கம் மங்களேஸ்வரி அவர்கள் கறையில்லா நிறை வாழ்வு கண்டு மின்னலென மறைந்தவர் சமூகத்திலும் சரி அயலவர், உறவினர் அனைவர் மத்தியிலும் அன்புக்கும், அபிமானத்துக்கும் உரியவராகத் திகழ்ந்தவர். பிறர்க்கு இன்னா செய்யாது தாமுண்டு தன் குடும்பமுண்டு என வாழ்ந்து மற்றையவர்களின் மதிப்பையும் பாராட்டையும் பெற்றவர்.

நல்லோர் வரிசையில் வாழ்ந்து அமரராகிவிட்ட மங்களேஸ்வரி அவர்கள் புன்சிரிப்புடன் விருந்தினரை வரவேற்கும் பண்பினராக இருந்தார். அன்னார் வளமற்ற வளமான காலமென்று ஏற்றத்தாழ்வுகள் இன்றி சாமானியமாக வாழ்ந்து காட்டியவர். நல்லவராவதும் தீயவராவதும் அன்னை வளர்ப்பினிலே என்பதற்கிணங்க தமது புத்திரர்கள் மூவரையும் சிறப்புற வளர்த்து கல்வி புகட்டி அவர்கள் உயர்கல்வி பெறும் வேளையில் குதூகலித்துக் கொண்டிருந்தவர். அன்னை வளர்ப்பின் மகிமையை அவர்தம் புதல்வர்கள் வெளிக்காட்டிக் கொண்டிருப்பதை யாவரும் அறிவர். அவர்கள் எதிர்காலத்தில் சமூகத்துக்கு ஆற்றப்போகும் சேவைதான் அமரராகிவிட்ட அந்த அன்னையின் இலட்சியமாகும்.

வீடு சிறக்க வேண்டுமென்றால், கணவன் சிறந்த சேவையாற்ற வேண்டுமானால், பிள்ளைகள் அறிவுடையோராக உயர வேண்டுமானால் குடும்பத் தலைவி எல்லாத் திறமைகளும் கொண்டவளாக குடும்பத்தை உருவாக்கும் சிற்பியாக மிளிர வேண்டும். இவையாவும் அமரர் மங்களேஸ்வரியின் குடும்பத்தில் பிரதிபலிக்கிறது. இவரது கணவர் ஞானலிங்கம் அஞ்சல் திணைக்களத்தில் பிரதம அஞ்சலதிபராக உயர்வதற்கு மனைவியின் ஆற்றுப்படுத்தலும் உதவி ஒத்தாசையும் இன்றியமையாதிருந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மையை யாவரும் அறிவர். அன்னார் உயர்ந்த எண்ணங்களாலும் செயல்களாலும் மனிதருள் மாணிக்கமாக வாழ்வாங்கு வாழ்ந்தவர்.

அனைத்து அருங்குணங்களும் ஒருங்கே நிறைவாகப் பெற்றிருந்த அம்மையார் அவர்கள் அடக்கமே உருவானவர்.

ஈடுசெய்ய முடியாத இழப்பினை எதிர்கொண்ட அமரரின் குடும்பத்தாருக்கும் சுற்றத்தாருக்கும் எனது ஆழ்ந்த அனுதாபத்தை வெளிப்படுத்துகிறேன். அமரர் ஞானலிங்கம் மங்களேஸ்வரியின் ஆத்மா சாந்தியடையப் பிராத்திப்போமாக.

த. கந்தையா
அதிபர்
யா/கொடிகாமம் திருநாவுக்கரசு ம.வி

**************************************************

# பிரிவுத் துயர் பகிர்வு

ஊரிலும் உறவிலும் உதவிகள் பல செய்ததால்
உம் அசைவு காணாது ஊரே கலங்குதம்மா
வஞ்சகம் இல்லாத நெஞ்சம்மா உந்தனுக்கு
பாதியிலே போவதற்கா இந்த நெஞ்சம் உங்களுக்கு
வளர்த்த பயிர் வாசலிலே வசந்தத்தை தேடிநிற்க
உம் தலைவர் உருக்குலைந்து வாசலிலே வாடிநிற்க
தேடி ஒருவர்க்கும் உம் பயணம் கூறாது
ஆதிரையான் பாதமலர் சூடுதற்கு சென்றாயோ!

அன்னாரின் பிரிவால் துயரடைந்து இருக்கும் அவரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

இங்ஙனம்
அஞ்சல் குடும்பம்
கொடிகாமம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## துயர் பகிர்கின்றோம்

மணியே மாணிக்க சுடர் விளக்கே ஒளிர்விட்டு சுடரும் மாமணியே
வந்தவரை வரவேற்கும் உன் பண்பாடு
நேற்று இருந்த நீங்கள் இன்று எங்கு சென்றீர்கள்?
கணப்பொழுதினில் காலன் உங்களைக் கவர்ந்து சென்றானோ?
சிரித்து சிரித்து பேசிய - உங்கள் அன்பு முகம் எங்கே?
சென்ற இடம் சொல்லத் தெரியாமல் எம் வழி சிவந்திட
நினைத்தவன் நினையாப் பிரகாரம் உனையழைத்திட
சென்ற இடம் சொல்லாமல் சிறகடித்து பறந்ததேனோ.

அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல தில்லை கூத்தன் திருப்பாதங்களை நிரைஞ்சி நிற்கின்றோம்.

**உரிமையாளர், சகஊழியர்கள்**
*ஸ்ரீ முருகன் தொலைத்தொடர்பகம் &*
*முகவர் தபால் நிலையம்*
*யாழ்ப்பாணம்.*

***************

## கண்ணீர் அஞ்சலி

அன்பின் திருவுருவாய் அமைதியின் உறைவிடமாய்
பண்பின் சிகரமாய் பாசத்தின் குலவிளக்காய்
பெற்ற பிள்ளைகளோடு பேரன்பு மிகக் கொண்டு
நண்பர்கள் போலிருந்து நல்லுறவு கொண்டீர்கள்
அன்பின் வடிவாய் அகிலத்தில் வாழ்ந்தீர்கள்
அறிவுரை பல கூறிடும் தாயாக எமக்கிருந்தீர்கள்
ஊரிலுள்ளோர் போற்றும்படி வாழ்ந்தீர்கள்
உங்கள் பிரிவால் உணர்விழந்து வாடுகின்றோம்.

அன்னாரின் பிரிவால் துயரடைந்து இருக்கும் அவரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

**A/L 2004 கணிதப்பிரிவு**
**நண்பர்கள்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இதய அஞ்சலி

இடிமேல் இடிவிழுந்த காரணந்தான் என்னவோ!
கடுக வந்த காலனவன் நின்னுயிரைப் பறித்தானோ!
மாருதம் வீசியதால் மண்மிசையில் சாய்ந்த மரம்
போல் உறங்கும் கொற்றவளே!
கோலமதை மாற்றியதால் கொடும் துயரில் சுற்றமெலாம்
செங்குருதி உறைய - நெஞ்சினிலே
துயர் சுமந்து தெம்பியழ போன இடம் எங்கே?
ஒளியிழந்த முகம் வருடி ஒப்பனைகள் சொல்லியுமே!
விழி திறந்து பாராமல் நீள் துயில் கொண்டனையோ!
வங்கத்தில் அலை ஓய்ந்தது வானிருளும் கலைந்தது
நின் பிரிவை சுமந்து நின்று - இன்று
நிலவுலகம் வடிக்கும் நீர் நின்னையே நீராட்டி
மண்ணிலே கலக்குதே!
கோதையவள் முகம்கண்டு நாம்
கொட்டுகின்றோம் கண்ணீரை....

அன்னாரின் பிரிவால் துயரடைந்து இருக்கும் அவரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தினைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

**உப அஞ்சல் அதிபரும், சக அஞ்சலக**
**உத்தியோகத்தர்களும்**

***உப அஞ்சலகம்***
***வரணி.***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதய அஞ்சலி

நேற்றுவரை நீங்கள் நிஜமாயிருந்தீர்கள்
இன்று நீங்கள் நினைவானீர்கள்
அன்பொழுகும் உங்கள் வார்த்தை
அருளொழுகும் உங்கள் பார்வை
நெஞ்சள்ளும் உங்கள் குணம்
நேசமுள்ள உங்கள் மனம்
இவையனைத்தும் உறைவிடமாய் கொண்ட
உங்கள் பூமுகத்தைக் காணும் பாக்கியம்தான்
மீண்டும் இனி வராதோ?

அன்னாரின் பிரிவால் துயரடைந்து இருக்கும் அவரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தினைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

நண்பர்கள்
பல்மருத்துவ பீடம்.
பேராதனை பல்கலைக்கழகம்.

# தேற்றம்

தோன்றி வளர்ந்துயர்ந்த துளித்துளியாய் - தேய்ந்தழிந்து
மாய்ந்து மறைந்தாலும் மறுபடியும் தோற்றமுறும்
சான்று ஒரு சந்திரன் போல் தான் மனித - வாழ்வுமெனத்
தேர்ந்து கொண்டால் போதும் இந்தத்துயர் மறந்து
போகுமையா.

# கல்வி பற்றி சுவாமி விவேகானந்தர்

- மனிதனுக்குள் ஏற்கனவே புதைந்திருக்கும் பரிபூரணத் தன்மையை வெளிப்படுத்துவதுதான் கல்வியாகும்

- எத்தகைய பயிற்சியின் மூலம் மனஉறுதியின் வேகமும் அதன் வெளிப்பாடும் தன்மையும் கட்டுப்பாட்டிற்கு உட்பட்டு, பயன்தரும் வகையில் அமைகின்றதோ, அந்தப் பயிற்சிதான் கல்வியாகும்.

- மனதை ஒரு முகப்படுத்துவதுதான் என்னைப் பொறுத்த வரையில் கல்வியின் அடிப்படையான லட்சியம் ஆகும்.

- எத்தகை கல்வி தன்னம்பிக்கையைத் தந்து ஒருவனைத் தனது சொந்தக்காலில் நிற்கும்படி செய்கிறதோ, அதுதான் உண்மையான கல்வியாகும்.

*************************************************

இக்காயம் நீக்கி இனி ஒரு காயத்திற்
புக்குப் பிறவாமல் போம் வழி நாடுமின்
எக்காலத்தில் உடல் வந்து எமக்கு ஆனதென்று
அக்காலம் முன்னே அருள் பெறலாமே.

– திருமூலர் திருமந்திரம் –


காலன் பருமுன்னே கண்பஞ்சடை முன்னே
பாலுண் கடைவாய் படுமுன்னே - மேல் விழுந்தே
உற்றார் அழுமுன்னே ஊரார் சுடுமுன்னே
குற்றாலத் தானேயே கூறு.

– பட்டினத்தடிகள் பாடல் –



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேரும் விழுதுகளும்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நவில்கின்றோம் நன்றி!

அன்புடையீர்!

பார்போற்ற வாழ்ந்த எங்கள் பாசஒளி விளக்கு நேர்கொண்டு நிமலன் தாழ் நிழலதனைக் கண்டதினம் எமக்காறுதல் கூறிப் பிரிவுத்துயரைப் பகிர்ந்து கொண்ட உற்றார், உறவினர், நண்பர்களுக்கும், குணமாக்குவோம் என்று இறுதிவரை போராடிய வைத்தியர்கள், தாதிமார்கள் ஏனைய வைத்தியசாலை ஊழியர்களுக்கும் மரணச்சடங்கினை இனிதே நிறைவேற்ற உதவிகள் பல புரிந்தவர்களுக்கும், இலவச போக்குவரத்துச் சேவைகளை வழங்கியவர்களுக்கும் மரணச்சடங்கில் பங்குபற்றியும் உதவிகள் பல புரிந்தவர்களுமான யாழ் பிரதம தபாலக அலுவலர்களுக்கும், ஏனைய தபாலக அலுவலர்களுக்கும், கண்ணீர் அஞ்சலிகளையும், மலர்வளையங்களையும் செலுத்தி தமது அனுதாபத்தைத் தெரிவித்தவர்களுக்கும், பத்திரிகைகளில் இதய அஞ்சலிகளை பிரசுரித்தவர்களுக்கும், தொலைபேசி, தந்தி மூலம் அனுதாபச் செய்திகளை அனுப்பியவர்களுக்கும், இறுதிக்கிரியைகள், அந்தியேட்டி சபிண்டீகரணக்கிரியை என்பவற்றை முற்றாக நின்று முடித்து வைத்த குருமார்கள் அனைவருக்கும் இதனை ஆக்கித் தந்த ஆசிரியருக்கும் இம்மலரை அச்சிட்டுத்தந்த ANDRA பிறிண்டேர்ஸ் நிறுவனத்தினருக்கும் மற்றும் பல வகையிலும் எமக்கு உறுதுணையாக நின்று உதவியோருக்கும் எமது இதயபூர்வமான இனிய நன்றியறி தலைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

நன்றி

**கணவர், பிள்ளைகள்,**

**உறவினர்கள்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கீதாசாரம்



எது நடந்ததோ,
அது நன்றாகவே நடந்தது.
எது நடக்கிறதோ,
அது நன்றாகவே நடக்கிறது.
எது நடக்க இருக்கிறதோ,
அதுவும் நன்றாகவே நடக்கும்.
உன்னுடையது எதை இழந்தாய்,
எதற்காக நீ அழுகிறாய்?
எதை நீ கொண்டு வந்தாய்?
அதை நீ இழப்பதற்கு.
எதை நீ படைத்திருக்கிறாய்,
அது வீணாகுவதற்கு.
எதை நீ எடுத்துக் கொண்டாயோ,
அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது.
எதை கொடுத்தாயோ,
அது இங்கேயே கொடுக்கப்பட்டது.
எது இன்று உன்னுடையதோ,
அது நாளை
மற்றொருவருடையதாகிறது.
மற்றொருநாள்
அது வேறொருவருடையதாகும்.

"இதுவே உலக நியதியும்,
எனது படைப்பின் சாராம்சமுமாகும்."

**பகவான் ஸ்ரீ கிருஷ்ணர்.**




ANDRA பிறிண்டேர்ஸ் K.K.S. றோட், உப்புமடம் சந்தி, கோண்டாவில். T.P :021-4590268.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org